மொத்த வியாபாரிகளிடத்திலேதான் லெவி கொள்முதல் செய்யப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. கட்டுப்படியான விலை கிடைக்கவேண்டும் என்பது ஒரு பக்கம் இருக்கின்றது. விலைவாசி ஏறிவிடக்கூடாது என்ற பிரச்சினையும் இன்னொரு பக்கம் இருக்கின்றது. நாம் இந்த இரண்டு பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே விலைவாசி அதிகமாக ஏறிவிடாத வகையிலே உற்பத்தியாளர்களுக்கு போதுமான விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக நாம் மத்திய அரசினிடத்திலே விலை நிர்ணயம் சம்பந்தமாக பல தடவை வற்புறுத்தி வருகிறோம். மேலும் பொருட்களை குறைந்த விலையிலே மக்களுக்கு வினியோகிக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டதால்தான் லெவி முறை கொண்டு வரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் உற்பத்திப் பொருளின் விலையினை அதிகமாக்க வேண்டும் என்று சொல்கின்றபோது அப்படி விலை ஏறினால் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்று கன்ஸ்யூம் பண்ணுகின்ற மாநிலங்கள்தான் அதிகமாக பாதிக்கப்படும் என்றும் பஞ்சாப், அரியானா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் கமர்சியலாகச் செய்வதால் அவர்களுக்குத்தான் விலையினை ஏற்றினால் லாபம் என்றும் ஆகவே நமக்கு நஷ்டம்தான் என்றும் ஆகவேதான் அதிகவிலை ஏற்படுத்தவில்லை என்றும் காரணம் கூறுகிறார்கள். ஆகவே, இந்த நிலையிலே கட்டுப்படியாகக் கூடியவிலையிலே வியாபாரிகளுக்கு சற்று கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

(ஆ) காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சி. த. சிதம்பரம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. சி. த. சிதம்பரம் : தலைவரவர்களே, ''உண்ணாவிரதம் இருந்த காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரிமாணவர்கள் கைது செய்யப்பெற்றது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 'காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வர், தற்போதைய நிலவரம் குறித்து தந்துள்ள விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொங்கல் விடுமுறைக்குப்பின் 23—1—1982 அன்று அக்கல்லூரி திறக்கப்பட்டது. அன்று முதல்வர் ஊரில் இல்லை. சில மாணவர்கள் கல்லூரிக்கு முன்நின்று அவர்கள் கோரிக்கைக்கு

ஆதரவாக அனைவரையும் (மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ரல்லாத பணியாளர்கள்) கல்லூரிக்குள் செல்லவேண்டாமென கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் கோரிக்கை யாதெனில் தற்போதைய கல்லூரிமுதல்வரை பதவிநீக்கம் செய்யவேண்டும் என்பதாகும். ஏனென்றால் கடந்த ஆண்டு இம்முதல்வரின் காரை எரித்ததாக கூறப்படும் 12 மாணவர்கள் நீதிமன்றத் தால் தண்டிக்கப்பட்டனர். 27—1—1982 அன்று மதுரை—காமராஜ் பல்கலை கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களுடைய ஆதரவை மாணவர்களுக்கு வெளிப் படையாக அறிவித்தனர். அவர்களும் மாணவர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதமிருந்தனர். அச்சடித்த விளம்பர சீட்டு களையும் மாணவர்களுக்கு ஆதரவாக வெளியிட்டனர். அன்று மதுரை—காமராஜ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தை சார்ந்த ஆசிரியர்களும் மற்றும் 40 ஆசிரியரல்லாத அலு வலகப் பணியாளர்களும் ஒட்டுமொத்தமாக சிறுவிடுப்பு எடுத்தனர் அன்றே (27—1—1982) அழகப்பா கல்லூரி நிர்வாக மும் தற்போதைய முதல்வரே பதவியில் தொடர்ந்து பணி யில் இருக்கவேண்டுமெனத் தீர்மானம் எடுத்தது. 28—1—1982 அன்று கல்லூரி விடுதியிலுள்ள பெரும்பாலான மாணவர்கள் வீட்டுக்குத் திரும்பினர். கிளர்ச்சியில் ஈடுபட்ட ஆசிரியர்களும் ஆரிசியரல்லாத பணியாளரும் தொடர்ந்து 28—1—82, மற் றும் 29—1—82 கல்லூரிக்குச் செல்லவில்லை. 3—2—82 அன்று அக்கல்லூரி திறக்கப்பட்டுவிட்டது.

திரு. சி. த. சிதம்பரம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்ட 71 மாணவர்களும் விடுதலை செய்யப்படுவார்களா? அமைதி ஏற்பட வேண்டும் என்ற சூழ் நிலையில் வழக்குகள் வாபஸ் பெறப்படுமா? 30 பேர் தண்டிக் கப்பட்டிருப்பதாக இப்போது சொன்னார்கள். ஆனால் நீதி மன்றத்திலே 18 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 12 பேர்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, 18 பேர்கள் குற்றமற்றவர்கள் என்றும் நிரபராதிகள் என்றும் சொல் லப்படுவது உண்மையா? ஆகவே 12 பேர்கள் குற்றவாளிகள் என்பது தீர்ப்பானாலும் மொத்த வழக்குகளும் வாபஸ் பெறப் படுமா? சென்ற ஆண்டும் அக்கல்லூரி சரியான முறையிலே நடைபெறவில்லை, அதே போன்று இந்த ஆண்டும் அந்த நிலைமை ஏற்படாத அளவுக்கு நல்ல முறையிலே அக்கல்லூரி நடைபெறுவதற்குரிய முயற்சிகளை அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்தக் கல்லூரி அமைதியாக நடப்பதற்குத் தேவையான நட வடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடத்தை மட்டும் சொல்லிக் கொடுக்க முற்படாமல் ஒழுக்கத்தையும் கற்றுத் தருகின்ற முறையிலே அரசு ஆவன செய்யுமா ? ஆகவே மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்காக பழைய கால முறையான குருகுலக் கல்வி முறையினை அரசு மீண்டும் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற முறையிலே ஆசிரியர்கள் அவர்களுக்குச் சொல்லித்தந்து அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10).

5. அரசினர் சட்ட முன்வடிவு.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற இந்தக் கட்டத்திலேயே அதனை அறிமுகம் செய்வதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் பிரஜைகளுடைய அடிப்படையான ஃபண்டமெண்டல் ரைட்ஸையே கருவறுக்கிறது. அதற்காக, கள்ளச் சாராயம் காய்ச்சுவது சரியான செயல் என்று சொல்லவில்லை—ஃபண்டமெண்டல் ரைட் என்று சொல்லவில்லை ; மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்வதை ஃபண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லவில்லை. ஆனால் யார் எந்தக் குற்றம் செய்தாலும் விசாரணைக் கூட இல்லாமல் சிறைப்படுத்துவது என்ற நடைமுறையில், விசாரணைக்கு வாய்ப்புக் கொடுக்க மறுப்பதைத் தான் பண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லி ஆட்சேபிக்கிறேன்.